SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் மார்கழி 5
ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிர் 17

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, டிசம்பர் 20, 2024 ● வெளியூர்: 21-12-2024, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 161 ● 6 பக்கம் ● ரூ.6

# ரூ.100 கோடி மதிப்பில்

# ஈரோடு மாநகராட்சி சாலைகள் மேம்படுத்தப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

ஈரோடு, டிச. 20–

ஈரோடு மாவட்டத்தின் அனைத்து துறைகள் சார்பில் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் திறப்பு விழா, புதிய திட்டப்பணிகள் தொடக்கவிழா, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஈரோடு சோலாரில் உள்ள புதிய பஸ் நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்றது.

இந்த விழாவில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு 50 ஆயிரத்து 88 பேருக்கு ரூ.284 கோடியே 2 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் ஈரோடு மாவட்டத்தில் ரூ.951 கோடியே 20 லட்சம் மதிப்பில் முடிவுற்ற 559 திட்ட பணிகளை தொடங்கி வைத்தும், ரூ.133 கோடியே 66 லட்சம் மதிப்பில் 222 புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

அதனை தொடர்ந்து விழாவில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: ஈரோடு மக்களை சந்திப்பது மகிழ்ச்சியாக இருந்தாலும் ஒரு சோகமும் உள்ளது. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவு எனக்குள் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. அவரது மறைவு ஈரோடு மக்களுக்கு மட்டுமல்ல தமிழகத்திற்கே பெரிய இழப்பு.



தந்தை பெரியார் நிகழ்த்தி காட்டிய வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவை கேரளாவில் சிறப்பாக நடத்திக்காட்டியுள்ளோம். திராவிட மாடல் ஆட்சியை கேரள மக்கள் பாராட்டி வருகின்றனர். அதற்கு ஈரோட்டின் மண்ணின் மைந்தன் தந்தை பெரியார் தான் காரணம். பெரியார், அண்ணா, கலைஞர் இல்லாவிட்டால் திராவிட இயக்கமே இல்லை. தமிழ்நாட்டின் பெரிய வரலாற்றுக்கான தொடக்கம் ஈரோடு மாவட்டம். அத்திக்கடவு அவினாசி திட்டத்தின் மூலம் ஈரோட்டில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் கிடைக்கிறது.

ஈரோடு மாவட்டத்தில் ஐடி பார்க் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். ஈரோடு மாநகராட்சி அந்தியூர், கோபி, முடக்குறிச்சி சாலைகள் ரூ.100 கோடியில் மேம்படுத்தப்படும். சத்தியமங்கலம், நம்பியூர், பவானிசாகர் கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ரூ.12 கோடியில் மேம்படுத்தப்படும். வாடகை கட்டிடத்தில் இயங்கும் துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டித் தரப்படும். உயர்கல்வித்துறையின் சிக்கநாயக்கர் கல்லூரியில் ரூ.10.75 கோடி மதிப்பில் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட வசதிகள் செய்யப்படும். சென்னிமலை உள்ளிட்ட 50 கிராமங்களில் ரூ.15 கோடி செலவில் கூட்டுக் குடிநீர் திட்டம் மேம்படுத்தப்படும். திருப்பூர் குமரன் நினைவை போற்றும் வகையில் சென்னிமலையில் அவரது நினைவு மண்டபம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கும். வெறும் அறிவிப்புகளை மட்டுமே வெளியிடும் அரசு இது கிடையாது. தமிழ்நாட்டில் நடப்பது, சொன்னதை செய்யும் உங்கள் ஸ்டாலினின் திராவிட மாடல் அரசு. பெண்களின் பொருளாதார விடுதலைக்காக மகளிர் உரிமைத் தொகை செயல்படுத்தபடுகிறது. மக்களைத் தேடி மருத்துவம், விவசாயிகளுக்கான பயிர்க்கடன், வங்கிக் கடன் மூலம் பலர் பயனடைந்துள்ளனர். பெஞ்சல் புயல் நிவாரணப் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி புலம்பிக் கொண்டே இருக்கிறார். திமுக அரசை மக்கள் பாராட்டி வருகின்றனர். இதனால் ஏற்பட்ட வயிற்றெரிச்சலால் திமுக மீது பொய் குற்றச்சாட்டுகளை எடப்பாடி பழனிசாமி முன்வைக்கிறார்.

இது அவர் வகிக்கும் எதிர்கட்சி தலைவர் பதவிக்கு அழகல்ல. குற்றம் சாட்ட எதுவும் இல்லாமல் பொய் சொல்லக்கூடாது. காலி குடம் உருண்டால் சத்தம் அதிகமாக தான் வரும். மத்திய அரசை பார்த்து கீச்சுக் குரலில் கூட பேச முடியாத லட்சணத்தில் அதிமுக உள்ளது. செந்தில் காமெடி போல எடப்பாடி பழனிசாமி தவறான தகவலை திரும்ப திரும்ப சொல்கிறார். இவ்வாறு அவர் கூறினார்.

## நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்




புதுடெல்லி, டிச. 20–

நாடாளுமன்ற மக்களவை, மாநில சட்டசபைகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பான, ஒரே நாடு ஒரே தேர்தல் திருத்த மசோதா மக்களவையில் கடந்த 17ம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. அப்போது, நாடாளுமன்ற மாநிலங்களவையில் அரசியல் சாசனம் பற்றிய 2 நாள் விவாதத்தின் முடிவாக மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா பேசினார். அவர் பேசும்போது, அம்பேத்கரை பற்றி சர்ச்சையாக பேசினார் என கூறப்படுகிறது.

அம்பேத்கர் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில், பா.ஜ.க. எம்.பி.க்கள் மற்றும் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் என இரு தரப்பினரும் மாறி மாறி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ.க. எம்.பி.க்கள் பிரதாப் சந்திர சாரங்கி மற்றும் முகேஷ் ராஜ்புத் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சியின் மக்களவை எதிர்க்கட்சி தலைவரான ராகுல் காந்தி தன்னை தள்ளிவிட்டதாக பிரதாப் சந்திர சாரங்கி பரபரப்பு குற்றச்சாட்டை கூறினார். தற்போது இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், அம்பேத்கர் குறித்த சர்ச்சை பேச்சுக்கு உள்துறை மந்திரி அமித்ஷா மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் தனது பதவியை அவர் ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர். கையில் பதாகைகளை ஏந்தி அமித்ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். இந்த போராட்டத்தில் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் ஈடுபட்டனர்.

## ஜனவரி 6ந்தேதி தமிழக சட்டசபை

## சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு



சென்னை, டிச. 20–

தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் ஜனவரி 6ந்தேதி கவர்னர் உரையுடன் தொடங்க உள்ளதாக சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார். கவர்னர் உரை மீதான விவாதத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து அலுவல் ஆய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்றும் அப்பாவு தெரிவித்துள்ளார். கடந்த முறை போல் அல்லாமல் கவர்னர் தனது உரையை முழுவதுமாக வாசிப்பார் என நம்புவோம். எதிர்க்கட்சி தலைவருக்கு உரிய அந்தஸ்து மரியாதை வழங்கப்பட்டு வருகிறது என அப்பாவு கூறினார். முன்னதாக, தமிழக சட்டசபை இந்த மாதம் 9ந்தேதி கூடிய போது டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தனித்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அரியானா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலா காலமானார்



புதுடெல்லி, டிச. 20–

இந்திய தேசிய லோக் தள தலைவரும் அரியானா மாநிலத்தின் முன்னாள் முதல்வருமான ஓம் பிரகாஷ் சௌதாலா மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 89. குருகிராமில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை மாரடைப்பு ஏற்பட்டு காலமானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அரியானா மாநிலத்தின் முதல்வராக 1989ம் ஆண்டு முதல் நான்கு முறை பதவி வகித்து ஓம் பிரகாஷ் சௌதாலா சாதனை படைத்துள்ளார். அவர் கடைசியாக மாநில முதல்வராக 1999ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரை பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஓம் பிரகாஷ் சௌதாலா மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## வடகிழக்கு பருவமழை 23ந்தேதி முதல் மீண்டும் தீவிரம் அடையும்

### வானிலை ஆய்வாளர்கள் தகவல்



சென்னை, டிச. 20–

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி, வட தமிழகம் மற்றும் தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை நோக்கி நகர்ந்து சென்றது. இது நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) சென்னைக்கு கிழக்கே வந்தடையும் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

அதன்பின்னர், 23ந்தேதி (திங்கட்கிழமை) டெல்டாவட இலங்கையையொட்டி நகர்ந்து சென்று, அதற்கு அடுத்த நாள் (24ந்தேதி) பாக்நீர் இணைப்பு அல்லது டெல்டா பகுதிகள் வழியாக உள்ளே நுழைந்து அரபிக்கடலை சென்றடைய இருக்கிறது என்று வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தாழ்வுப்பகுதி காரணமாக வருகிற 23ந்தேதியில் இருந்து சென்னை உள்ளிட்ட பகுதிகளில் தீவிர மழை பெய்யத் தொடங்கும். அதனைத்தொடர்ந்து டெல்டா மாவட்டங்கள் தொடங்கி தமிழ்நாட்டில் பரவலாக மழையை கொடுத்து சென்றே அரபிக்கடல் பகுதியில் இந்த தாழ்வுப் பகுதி வலு இழக்க இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக லட்சத்தீவு பகுதியில் இருந்து வரும் நிகழ்வு, சுமத்ரா தீவில் இருந்து வரும் நிகழ்வு ஒன்றிணைந்து 26ந்தேதி மீண்டும் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக இருப்பதாக வானிலை ஆய்வாளர் நா.செல்வக்குமார் தெரிவித்தார். இது மேலும் தமிழக பகுதிகளை நோக்கி நகர்ந்து, 28ந்தேதியில் இருந்து 31ந்தேதி வரை மழையை கொடுக்கக்கூடிய நிகழ்வாகவே இருக்கும் என்றும் அவர் கூறினார்.

# திருவெண்ணெய்நல்லூரில் சாலை மறியல்



**திருவெண்ணெய்நல்லூர், டிச. 20–**

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள சாராயமேடுகண்ணாரம்பட்டு இடையே செல்லும் மலட்டாறு தரைப்பாலம் வெள்ளப்பெருக்கில் அடித்து செல்லப்பட்டதால் 20 நாட்களாக போக்குவரத்து இன்றி செல்வதற்கு வழி இன்றி அவதிப்படுவதாக கூறியும் மேம்பாலம் அமைக்க வேண்டும் என கூறி பண்ருட்டி – திருவெண்ணெய்நல்லூர் சாலையில் சாராயமேடு பேருந்து நிறுத்தம் முன்பு சாலை மறியல் போராட்டம் செய்தனர்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள கண்ணாரம்பட்டு கிராமத்திற்கு செல்லும் வழியில் சாராயம்மேடு கண்ணாரம்பட்டு கிராமத்திற்கு இடையில் மலடாறு செல்கின்றது. இந்த மலடார் கடந்த 1ம் தேதி மல்லட்டாறில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக தரைப்பாலம் ஆற்றில் அடித்து செல்லப்பட்டது. இதனால் கண்ணாரம்பட்டு கிராம மக்கள் திருவெண்ணைநல்லூர் வழியாகவும் தென்மங்கலம் வழியாக பல கிலோமீட்டர் சுற்றிக்கொண்டு செல்கின்றனர். மேலும் பொதுமக்கள் பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவிகள், விவசாயிகள், பெண்கள் உள்ளிட்ட அனைவரும் மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். உடைந்த பாலத்தை சரி செய்ய அதிகாரிகள் தற்காலிக நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் மலட்டாறில் வெள்ளம் வரும்போது எல்லாம் இந்த தரைப்பழம் அடித்து செல்லப்படுவதால் பொதுமக்கள் ஒவ்வொரு ஆண்டும் அவதிப்பட்டு வருவதாக கூறி இந்த இடத்தில் நிரந்தரமாக மேம்பாலம் அமைக்க வேண்டும் எனவும் உடனடியாக தற்காலிக தரைப்பாலம் அமைக்க வேண்டும் எனக் கூறி பொதுமக்கள் அரசூர், திருவெண்ணெய்நல்லூர் சாலையில் பேருந்து நிறுத்தம் முன்பு சாலை மறியல் போராட்டம் செய்தனர். இது பற்றி தகவல் அறிந்த திருவெண்ணெய்நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவி, பாலசுப்பிரமணியன், விழுப்புரம் உதவி காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ்குமார் குப்தா, திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மைக்கேல் இருதயராஜ் மற்றும் போலீசார் மற்றும் அதிகாரிகள் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறியதன் பெயரில் பொதுமக்கள் நீண்ட நேரம் போராட்டத்திற்கு பிறகு சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டனர். இதனால் இப்பகுதியில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அதிகாரிகளின் உறுதிமியை ஏற்று பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# கடையம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்



**கடையம், டிச. 20–**

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கடையம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஏ.பி..என் ஊராட்சி மடவார் விளாகத்தில் கடையம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் இரா.மகேஷ் மாயவன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் வட்டார தலைவர் அழகுதுரை, மாவட்ட கவுன்சிலர் சுதா சின்னதம்பி, ஒன்றிய கவுன்சிலர் பாலக செல்வி பாலமுருகன், மாவட்ட பிரநிதி மதிவானன், ஒன்றிய துணை செயலாளர்கள் பிரம்ம நாயம், கஸ்தூரி சுடலை மணி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் முத்தரசி காளித்துரை

மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் லெட்சுமணன், கிளைச் செயலாளர்கள் பாலமுருகன், நானு, முருகன், ஆறுமுகம், கருத்தப்பாண்டி, தில்லை பிரம்ம நாயகம், ராமசந்திரன், ரமேஷ், ஏகாம்பரம், ராமநாடார், ஜயம் பெரும்மாள், குமரசிங், காளி, கார்த்திக், பாலமுருகன், நாகேஷ், இசக்கி மற்றும் 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**கடையம், டிச. 20–**

அன்னல் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் கடையம் சின்னத்தேர் திடலில் கடையம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ஆ. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் தமிழ்ச்செல்வன், ஒன்றிய அவைத் தலைவர் பக்கீர் மைதீன், ஒன்றிய பொருளாளர், சுடலைமுத்து, ஒன்றிய துணை செயலாளர் முல்லையப்பன், மாவட்ட பிரதிநிதிகள் அய்யன் சாமி, முகமது யாகூப், பெருமாள், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சுந்தரி மாரியப்பன், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கருணாநிதி, ஒன்றிய கவுன்சிலர் புஷ்பராணி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முகமது இப்ராகிம், மகளிர் அணி ஷோபனா, ராணி கார்த்திகா, மாரியம்மாள், ராஜேஸ்வரி, வாணி, கிளைச் செயலாளர்கள் மருதப்பன், காந்தி, முருகன், பெருமாள், முத்தையா, அழகிய நம்பி, இப்ராஹிம், ஓட்டுநர் மாவட்ட துணை அமைப்பாளர் ஜெயசிங், அப்துல் ரகுமான், முகமது கலிபா, சேட்டு, திருமலை குமார், மகாதேவன், முன்னாள் பொறுப்பு குழு உறுப்பினர் சுந்தரம், வின்செண்ட் பால், ஆம்பூர் அறங்காவலர் குழு தலைவர் மூர்த்தி . காளிமுத்து, ராமகிருஷ்ணன் என்ற குட்டி கிருஷ்ணன், மோகன் எல் அண்ட்டி, முருகன், முத்தையா, காதராஜன் பாரதிதாசன் சுரேஷ் கோபி மற்றும் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# முதல்வருக்கு உற்சாக வரவேற்பு



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஈரோடு மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில் கலந்துகொள்வதற்காக ஈரோட்டிற்கு வருகை தந்தபோது, வழிநெடுகிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலகம் அருகே செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்க புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# விழிப்புணர்வு பிரச்சார பதாகைகள் வெளியீடு



கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (மகளிர் திட்டம்) சார்பில் பாலியல் வன்முறைக்கெதிரான விழிப்புணர்வு பிரச்சார பதாகைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் வெளியிட்டார்.

# மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கல்



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தில் மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்ற மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பரிசு மற்றும் வெற்றிபெற்றதற்கான சான்றிதழ்களை வழங்கினார்.

# எனது அதிகாரத்தில் தலையிட உச்ச நீதிமன்றத்திற்கே அதிகாரம் இல்லை

## சபாநாயகர் செல்வம் 'பளிச்'



புதுச்சேரி, டிச. 20–

சட்ட விதிகளுக்கு உட்பட்டே செயல்படுகிறேன் என்பதால், எனது அதிகாரத்தில் தலையிட உச்ச நீதிமன்றத்திற்கே அதிகாரம் இல்லை என, சபாநாயகர் செல்வம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி சபாநாயகர் செல்வம் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: நான் சட்டசபை மாண்புகளை மதித்து தான் சபையை நடத்தி வருகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளில் சட்டசபையில் அதிக கேள்விகளுக்கு உறுப்பினர்களுக்கான பதிலை வாங்கிக் கொடுத்துள்ளேன்.

சட்ட விதிகளுக்கு உட்பட்டே செயல்பட்டு வருகிறேன். கடந்த 1963ல் வகுக்கப்பட்ட புதுச்சேரி சட்டத்தின்படி கவர்னர், முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் சபாநாயகர் பங்கேற்கலாம். இது சட்டப்படியான உரிமை. இதை தடுக்க யாராலும் முடியாது. இந்த சட்டமாண்பு படி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். இதற்கு முன் இருந்தவர்கள் இதை கடைபிடிக்கவில்லை.

முதலமைச்சர் அழைப்பின் பேரில் தான் அவரது அறைக்கு செல்கிறேன். தேவையில்லாத விஷயங்களில் நான் தலையிடுவதில்லை. எந்த கட்சி நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டேன் என்று நிரூபிக்க முடியுமா? எனது அதிகாரத்தில் தலையிட நேரு எம்.எல்.ஏ., அல்ல. உச்சநீதிமன்றத்திற்கே அதிகாரம் இல்லை.

நேரு எம்.எல்.ஏ., மனு கொடுத்தது அவரது உரிமை. அது குறித்து, அடுத்த சட்டசபை கூட்டத்தில் விவாதத்துக்கு வைக்கப்படும். அதற்கு 7 எம்.எல்.ஏ.,க்கள் கையெழுத்து தேவை. விவாதத்தின் அடிப்படையில் எடுக்கும் முடிவின்படி செயல்படுவேன். நேரு எம்.எல்.ஏ., உடன் மோதல் இல்லை. அனைத்து எம்.எல்.ஏ.,க்களையும் அரவணைத்தே செல்கிறேன்.

அகில இந்திய சபாநாயகர் மாநாட்டை புதுச்சேரியில் நடத்த பார்லிமென்ட் தலைவர் அனுமதி அளித்துள்ளார். இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக துணை ஜனாதிபதி பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து

# திருவிடைமருதூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூர், டிச. 20–

இந்திய அரசியலமைப்பின் தந்தை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை அவமதித்து பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தஞ்சாவூர் வடக்கு மாவட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு மாவட்டச் செயலாளர் க செ.முல்லை வளவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் மண்டலச் செயலாளர் விவேகானந்தன், முன்னாள் மாவட்டச் செயலாளர் தமிழருவி, மாநில பொறுப்பாளர்கள் சிற்றரசு,செல்வம், ஒளியவன், முருகதாஸ், வெண்மணி, அமுதன் புரட்சியாளன் பாலகுரு திருமாறன் துறையரசன், ஒன்றியச் செயலாளர்கள் கண்ணன், பரிதி வளவன், இளங்கோவன், முருகதாஸ், புதியவன், காசி தமிழ், நகரச் செயலாளர்கள் தமிழரசன், அருமை துரை, மோகன், கரிகாலன், இடவை பிரபா, மற்றும் நிர்வாகிகள் சுதாகர், போழகுடி சசிகுமார், சிவநேசன் முகில், குறிச்சி மலை ராஜேஷ், தமிழன்,விக்கிவளவன் ஷாபீருள்ளா, சையத் அலி, சுரேஷ், புரட்சி அரசு, மைனா ராஜா, கதிரை ஞானசீலன், ஆடுதுறை சுரேஷ், மற்றும் இருநூற்றுக்கும் மேலானவர்கள் கலந்து கொண்டனர்.

# புதுவை ஸ்ரீஅரவிந்தோ சங்கத்தில் சித்தர் நாள் பன்னாட்டு கருத்தரங்கம்



புதுச்சேரி, டிச. 20–

புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் சங்கத்தின் ஆரோபாரதி நிறுவனம் புதுவை ஸ்ரீ அரவிந்தோ சங்கத்தில் நடைபெற்ற சித்தர் நாள் குறித்த பன்னாட்டு கருத்தரங்கத்தில் புதுச்சேரி கலைமாமணி முனைவர் சுந்தரம் முருகன் கலந்துகொண்டு அகஸ்திய முனிவர் மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் சித்தர் மற்றும் வேதப் பாரம்பரியம் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

விழாவில் புதுச்சேரி அரவிந்தர் சங்கத்தைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் ஆரோக்கிய அமைப்பின் செயலர் கிஷோர் குமார் திருப்பாத்தி, புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் தணிக்கை அரசு மற்றும் புதுச்சேரி கலை பண்பாட்டு துறையின் இயக்குனர் கலியபெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு அகஸ்திய முனிவர் என்னும் சித்தர் குறித்து உரையாற்றினர். விழாவில் கல்லூரி மாணவர்கள், சாதகர்கள் அரவிந்த சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். சிறப்புரை ஆற்றிய வர்களுக்கும் உரையாற்றியவர்களுக்கும் அரவிந்தர் சங்கத்தின் நிர்வாகிகள் சான்றிதழ் வழங்கினர்.

# புத்தாண்டு கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்த முன் அனுமதி அவசியம்-நகராட்சி ஆணையர் கந்தசாமி அறிவுறுத்தல்

புதுச்சேரி, டிச. 20–

புதுச்சேரியில் கிறிஸ்துமஸ், புத்தாண்டு கேளிக்கை நிகழ்ச்சி நடத்த முன் அனுமதி பெற வேண்டும் என, புதுச்சேரி நகராட்சி ஆணையர் கந்தசாமி அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: புதுச்சேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கிறிஸ்துமஸ், புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நட்சத்திர ஓட்டல்கள், இதர ஓட்டல்கள், தங்கும் விடுதிகள், பிற இடங்களில் அனுமதிக்கப்பட்ட கேளிக்கை, விருந்து, மெல்லிசை நிகழ்ச்சிகள் நடத்துவோர் நகராட்சி சட்ட விதிகளின்படி உரிமம் பெற வேண்டும். எனவே கேளிக்கை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள 7 நாட்களுக்கு முன்னதாகவே புதுச்சேரி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

புதுச்சேரி நகராட்சி வருவாய் பிரிவு 2ல் கேளிக்கை உரிம கட்டணம், வருவாய் பிரிவு 1ல் கேளிக்கை வரியை செலுத்தி முன் அனுமதி பெற்ற பிறகே நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். கேளிக்கைக்கான நுழைவு கட்டணம் தனியாக வசூலித்தாலும் அல்லது உணவு, மதுபானம் ஆகிய கட்டணங்களை மறைமுகமாக சேர்த்து வசூலித்தாலும் நகராட்சிக்கு வரி செலுத்த வேண்டும்.

அனுமதியின்றி நிகழ்ச்சிகள் நடத்தினால் நகராட்சிகள் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து, நிகழ்ச்சி நிறுத்தப்படும். அந்த நிறுவனங்களின் வணிக உரிமம் உடனடியாக ரத்து செய்யப்படும். கிறிஸ்துமஸ், புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சிகளை கண்காணிக்க நகராட்சி சார்பில், பறக்கும் படைகள் அமைக்கப் படுகிறது. இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# புதுச்சேரியில் உயர்மட்ட மேம்பாலம்: மத்திய தரைவழி துறை செயலருடன் அமைச்சர் லட்சுமி நாராயணன் ஆலோசனை



புதுச்சேரி, டிச. 20–

புதுவை முதலமைச்சர் ரங்கசாமியின் வழிகாட்டுதலின்படி, பொதுப்பணித் துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், மத்திய தரைவழி துறை செயலரை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

டில்லியில் மத்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் துறை செயலர் உமாசங்கரை, பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதில், புதுச்சேரி இந்திராகாந்தி சதுக்கம் முதல் இராஜீவ் காந்தி சதுக்கம் வரையிலான உயர்மட்ட மேம்பாலம் கட்டுவதற்கான அனுமதி வழங்க வேண்டும் என, கேட்டுக்கொண்டார். ஏற்கனவே ஆய்வுப் பணிகளுக்காகவும் விரிவான திட்ட மதிப்பீடு தயாரிப்பதற்காகவும் போதிய நிதி ஒதுக்கப்பட்டு விரிவான திட்ட மதிப்பீடு தயாரித்து அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது. இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்கினால், உடனே மேம்பாலப் பணிகளை ஆரம்பிக்கலாம் என ஆலோசனை நடத்தினார்.

மேலும், இந்த நகரப்பகுதியைக் கடப்பதற்கு உயர்மட்ட பாலத்தின் இன்றியமையாமையை விளக்கினார். இந்திராகாந்தி சதுக்கம் முதல் முள்ளோடை வரையுள்ள இரண்டு வழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றி அமைக்கவும், புதுச்சேரியின் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும் கோரிக்கை வைத்தார். இது தொடர்பாக செயலர் உடனடியாக அதிகாரிகளை அழைத்து பேசி புதிய புறவழிச் சாலை வந்தாலும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க இந்திராகாந்தி சதுக்கத்தையும் இராஜீவ் காந்தி சதுக்கத்தையும் இணைக்கும் உயர்மட்ட மேம்பாலம் அமைப்பதற்கு தேவையான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அனுமதி வழங்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய தரைவழிப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த சந்திப்பின் போது புதுவை பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் பாலசுப்பிரமணியன், நீர்ப்பாசனக் கோட்ட உதவிப் பொறியாளர் செல்வராசு, சிவில் மந்த்ரா தொழில்நுட்ப ஆலோசகர் பொறியாளர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# உளுந்தூர்பேட்டை அருகே பேருந்து நிலையத்தை திறந்து வைத்த அமைச்சர் சிவசங்கரன்




உளுந்தூர்பேட்டை, டிச. 20–

உளுந்தூர்பேட்டை அருகே அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க சார்பில் வண்டி பாளையத்தில் திறந்து வைத்தார் போக்குவரத்து அமைச்சர் சிவசங்கரன் திறந்து வைத்தார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலுக்கா வண்டியபாளையத்தில் அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்க சார்பில் பேருந்து நிலையம் 6 ஏக்கரில் சில மாதங்களுக்கு முன்பு ஏற்பாடு செய்து தயார் நிலையில் இருந்தது. ஆம்னி பேருந்து சங்க தலைவர் அன்பழகன் வரவேற்புரையாற்றினார். செயலாளர் தாரை திருஞானம் தொகுத்து வழங்கினார். இதனைத் தொடர்ந்து தமிழக போக்குவரத்து அமைச்சர் சிவசங்கரன் பேருந்து நிலையத்தை திறந்து வைத்து கடை உரிமையாளர்களுக்கு சாவியை வழங்கினார். அவர் பேசுகையில், ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்கம் பல ஆண்டுகளாக தமிழ்நாட்டில் இருந்து கன்னியாகுமரி வரை செல்லும் அனைத்து பேருந்து ஓட்டுநர்களுக்கு இடையில் தங்கி செல்லும் வசதி கிடையாது என்று கோரிக்கை வைத்தனர்.

கோரிக்கையை ஏற்று தனியார் உரிமையாளர் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்திருந்தது. அது தமிழ்நாடு மையப்பகுதியாக வண்டி பாளையம் விளங்கும் என போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். அதோடு தமிழ்நாடு அரசு போக்குவரத்து பேருந்துகள் மேம்பாலத்தில் செல்கின்றன. கீழே சர்வீஸ் ரோட்டில் வருவதில்லை என பொதுமக்கள் கோரிக்கை வைத்து தெரிவித்தார்கள். அதை உடனடியாக சரி செய்யப்படும் என தெரிவித்தார். மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் அனைத்து கிராமங்களுக்கும் தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் ஏற்பாட்டின்பேரில் குட் கிராமங்களுக்கு பேருந்து வசதி, பொதுமக்கள் மகிழ்வோடு ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது எனது தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஆர்ஜே மணிக்கணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடுவன்னியர் நலவாரிய குழு உறுப்பினருமான அன்னியூர்சிவா, உளுந்தூர்பேட்டை நகர மன்ற துணைத் தலைவர் வைத்தியநாதன், உளுந்தூர்பேட்டை நகர மன்ற உறுப்பினர்கள் கலா செல்வகுமாரி, ரமேஷ்பாபு கலந்துகொண்டனர். பொருளார் தாஜ்தீன் நன்றியுரை கூறினார்.

# என்.ஆர்., காங்கிரஸ் அரசு எந்த நேரத்திலும் கவிழும் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி தகவல்



புதுச்சேரி, டிச. 20–

என்.ஆர்., காங்கிரஸ் அரசு எந்த நேரத்திலும் கவிழும் என, முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி ஜோசியம் தெரிவித்துள்ளார்.

புதுவை முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: மக்களவையில் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா தாக்கல் ஆகியுள்ளது. அதனை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை. ஆனால் பாஜகவுக்கு மக்களவை மற்றும் மாநிலங்களவையில் போதிய பலம் இல்லை. அதானி விவகாரத்தை திசை திருப்பவே இதனை கொண்டு வந்துள்ளனர். பாராளுமன்றத்தில் குழப்பத்தை ஏற்படுத்தவே இந்த வேலையை அவர்கள் கையில் எடுத்துள்ளனர்.

அண்ணல் அம்பேத்கரை இழிவுபடுத்தும் வகையில் மத்திய அமைச்சர் அமித்ஷா பாராளுமன்றத்தில் பேசி உள்ளார். அம்பேத்கரை குறித்து பேசுவதற்கு பதிலாக கடவுளை பிரார்த்தித்தால் மோட்சமாவது கிடைக்கும் என்று கிண்டல் அடித்து பேசி உள்ளார். அமித்ஷா நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பாராளுமன்றம் முடக்கம் செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் மழையால் பாதிக்கப்பட்டோருக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 5,000 அளித்துள்ளனர். பெரும் பாலானோர் இத்தொகையை பெற முடியவில்லை. விவசாயிகள், மீனவர்கள், வீடு பாதித்தோருக்கு அரசு இதுவரை நிவாரணம் தரவில்லை.

முதலமைச்சர் ரங்கசாமி டில்லிக்குச் சென்று மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வெள்ள நிவாரணம் பெற்று இருக்க வேண்டும். ஆனால், முதலமைச்சரும், அமைச்சர்களும் மக்களை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்வதில்லை. ஆட்சியாளர்கள் மக்களைப் பற்றி கவலைப்படவில்லை.

புதுச்சேரியில் லாட்டரி வியாபாரிகள் புதுச்சேரியில் நிவாரணம் வழங்குவது போல அரசியலுக்குள் நுழைய பார்க்கின்றனர். அமலாக்கத்துறை, வருமானவரித்துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டவர்கள் புதுச்சேரியில் முதல்வர் சரியாக செயல்படவில்லை. அதனால் அரசியலில் நுழைகிறோம் என்கின்றனர். புதுச்சேரியில் லாட்டரி கொண்டு வரவும், அரசு நிலங்களை அபகரிக்கவும் திட்டமிடுகின்றனர். இவர்கள் பொருளாதார குற்றம் செய்தவர்கள். இதை புதுச்சேரி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இது குறித்து காங்கிரஸ் சார்பில் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

நான் சுட்டு போட்டாலும் காங்கிரசை விட்டு செல்ல மாட்டேன். சமூக பொருளாதார குற்றவாளியை காங்கிரஸ் கட்சி சேர்க்காது.

புதுவையில் முதலமைச்சர் ரங்கசாமிக்கு ஆதரவாக 13 எம்.எல்.ஏ.,க்கள் தான் உள்ளனர். மற்றவர்கள் வெளியே உள்ளனர். இந்த ஆட்சி ஆட்டம் கண்டு விட்டது. இந்த மைனாரிட்டி அரசு பெரும்பான்மை இழந்த நிலையில், எந்த தருணத்திலும் கவிழும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்.

புதுச்சேரி புதிய பஸ் நிலையம், குமரகுருபள்ளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் பணிகளில் ஊழல் நடந்துள்ளது. 2026ல் காங்கிரஸ் தலைமையில் ஆட்சி வந்த பிறகு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்போம்.

புதுச்சேரி அரசு ஊழல் தொடர்பாக, ஜனாதிபதிக்கு புகார் அனுப்பி விசாரணை நடத்த கூறுவோம். முதலில் நிர்வாக ரீதியாக செல்வோம். அதில் நடவடிக்கை திருப்தியாக இல்லாவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம். புதுவை சபாநாயகர், பாஜக எம்.எல்.ஏ.,வாக செயல்படுகிறார். அவர் சபாநாயகராக இருக்கவே தகுதி அற்றவர். இவ்வாறு அவர் கூறினார்.

# அங்கூரான் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் அறிவியல் மையம் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்




**மதுரை, டிச. 20-**

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மதுரை மாநகராட்சி மற்றும் அங்கூரான் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் அறிவியல் மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில், மதிப்பிற்குரிய மேயர் இந்திராணி பொன்வசந்த் முன்னிலையில் அறிவியல் மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் மதுரை மாநகராட்சி மற்றும் அங்கூரான் நிறுவனத்துடனான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அங்கூரான் நிறுவன முதன்மை செயல் இயக்குநர் பீமல் குமார் பட்வாரி, மதுரை மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார், ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மதுரை மாநகராட்சியின் சார்பில் 0.56 ஏக்கர் பரப்பளவில் புது ஜெயில் ரோடு பழைய கரிமேடு மீன் மார்க்கெட் இடத்தில் அனுமதி அளிக்கப்பட்டு பினாக்கல் இன்போடெக் சொலியூசன்ஸ் அங்கூரான் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் அறிவியல் மையம் அமைக்கப்பட உள்ளது. அங்கூரான் நிறுவனத்தின் சார்பில் ரூ.5 லட்சம் மதிப்பில் அறிவியல் மையத்தின் மாதாந்திர பராமரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது. மதுரை மாநகராட்சி சார்பில் குடிநீர் மற்றும் மின் கட்டணம் சேவை மேற்கொள்ள உள்ளது.

அங்கூரான் அறிவியல் மையம் தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு கல்விச் செயல்பாடுகளை வழங்குகிறது. இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதத்தில் சோதனைகளுக்கான ஆய்வகங்கள், மின்சாரம் மற்றும் இயந்திர மாதிரிகள் ஆண்ட்ரோபோட்களை உருவாக்கு வதற்கான வசதிகள், கணினி நிரலாக்கம், உலகளாவிய அறிவியல் மேம்பாடுகள் மற்றும் விஞ்ஞானிகளின் இந்த மையத்தில் இடம்பெறும்.

அங்கூரான் அறிவியல் மையம் அதன் சேவைகளுக்கான செலவுகளை ஈடுகட்ட இலாப நோக்கற்ற அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. அரசு உதவி பெறும் பள்ளிகளின் குழந்தைகளுக்கு அனுமி இலவசம் மற்றவர்களுக்கு நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ஒரு ரூ.50 அரசு சாராத பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ.25 கட்டணம் வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அங்கூரான் அறிவியல் மையம் அதன் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி அங்கூரான் அறிவியல் மையத்தால் நிர்வகிக்கப்படும் மற்றும் பின்வரும் 5 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவினரை கொண்டு செயல்பட உள்ளது. அரசு பிரதிநிதிகளாக ஆணையர், மதுரை மாநகராட்சி 2. மாநகராட்சி கல்வி அலுவலர் ஆகியோர் குழுவில் இடம் பெறுவார்கள். இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் சாலிதளபதி, மகேஸ்வரன், அங்கூரான் நிறுவனம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்



**கோவை, டிச. 20-**

இந்தியாவின் புரட்சியாளர் சட்டமேதை அம்பேத்கரை அவமதிப்பு செய்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆதித்தமிழர் பேரவை மாநில இளைஞரணி செயலாளர் கோவை ராவணன் தலைமையில் உருவபொம்மை எரிப்பு போராட்டம் நடைபெற்றது. ஆதித்தமிழர் பேரவையினர் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் உருவ பொம்மையை எரித்தனர். அருகில் இருந்த காவல்துறையினர் விரைந்து உருவ பொம்மையை கைப்பற்றி தீயை அணைத்தனர். பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் அதிரடியாக கைது செய்தனர். கைது செய்து வேனில் ஏற்றும்போது ஆதித்தமிழர் பேரவையினர் மத்திய உள்துறை அமைச்சருக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பினர். மேலும் பதவி விலக வேண்டும் என்றும் கோஷமிட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு ஆதித்தமிழர் பேரவை மாநில கொள்கை பரப்பு செயலாளர் அகிலன் மற்றும் மாவட்ட தலைவர் குப்புராஜ், மாநகர மாவட்ட துணைச் செயலாளர் தங்கராஜ், மாநகர மாவட்ட இளைஞரணி செயலாளர் பவித்ரன், மாவட்ட துணை செயலாளர் கார்த்திக் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# காரைக்காலில் திமுக, விடுதலை சிறுத்தை கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்






**காரைக்கால், டிச. 20-**

காரைக்கால் தலைமை தபால் நிலையம் பஸ் நிலையம் அருகே, அம்பேத்கரை அவமதித்து பேசிய, உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து காரைக்காலில் திமுக, விடுதலை சிறுத்தை கட்சியினர் தனித்தனியே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

காரைக்கால் தலைமை தபால் நிலையம் பஸ் நிலையம் அருகே, அம்பேத்கரை அவமதித்து பேசிய, உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து காரைக்காலில் திமுக, விடுதலை சிறுத்தை கட்சியினர் தனித்தனியே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.காரைக்கால் தபால் நிலையம் அருகில் நடைபெற்ற திமுகவின் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, காரைக்கால் தெற்கு தொகுதி எம்எல்ஏ ஏஎம் எச்.நாஜிம் தலைமை தாங்கினார். நிரவி திரு.பட்டினம் தொகுதி எம்எல்ஏ எம்.நாக தியாக ராஜன் முன்னிலை வகித்தார். மூத்த நிர்வாகிகள் அமுதா ஆறுமுகம், வக்கீல் இராம. வெற்றிச் செல்வன், இன்ஜினியர் சி. உதய குமார் மற்றும் பல அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.ஆர்ப்பாட்டத்தில், இந்திய அரசியலைமப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமாமேதை, டாக்டர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. அதேபோல் காரைக்கால் மாவட்ட விடுதலை சிறுத்தை கட்சி சார்பில், காரைக்கால் புதிய பஸ் நிலையம் அருகே, நேற்று அம்பேத் கரை அவமதித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் மூத்த நிர்வாகிகள் செந்தமிழ்ச்செல் வன், விடுதலைக் கண்ணன், நகு செல்வ சுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சபாநாயகர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் சட்டசபை செயலரிடம் நேரு எம்.எல்.ஏ., மனு



**புதுச்சேரி, டிச. 20-**

புதுச்சேரி சபாநாயகர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர கோரி, சட்டசபை செயலரிடம் சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு, நேற்று மனு வழங்கியுள்ளார்.

புதுச்சேரி உருளையன்பேட்டை தொகுதி சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு நேற்று காலை சட்டசபை செயலர் தயாளனை நேரில் சந்தித்து, சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர கோரி மனு கொடுத்தார்.

அதன் பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது, புதுவை சபாநாயகர் அந்த பதிவியின் புனித தன்மையை அவமதிக்கும் வகையில் செயல்படுகிறார். சட்டமன்ற உறுதி மொழிக்குழு தலைவர் பதவியில் இருந்து என்னை நீக்கியதன் மூலம் அவர் பாகுபாட்டுடன் செயல்படுவது உறுதியானது. அவரது தனிப்பட்ட நோக்கத்தையும், பழிவாங்கும் போக்கையும் வெளிப்படுத்துகிறது. இது எனது தனிப்பட்ட குற்றச்சாட்டு அல்ல. சபாநாயகரின் போக்கு அரசியலமைப்பு சட்டத்தை மீறுவதாக உள்ளது. அமைச்சரவையின் பங்கை மீற அவர் முயற்சிக்கிறார். அவர் நிழல் முதலமைச்சராக செயல்படுகிறார். தற்போது, பொது கணக்கு குழு மற்றும் மதிப்பீட்டுக்குழு தலைவர் பதவியையும் அபகரித்து அரசியலமைப்புக்கு முரணாக செயல்பட்டு, தணிக்கை குழுவிற்கு தலைமை தாங்கியுள்ளார்.

இதன் மூலம் அரசியலமைப்பு விதிமுறைகளை மீறி, முன்னோடி யில்லாத எடுத்துக்காட்டை உருவாக்கி, அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளார். முக்கியமான அழைப்பிதழில் தனது படத்தை திணிக்க அரசியலமைப்புகளையும், அதிகாரிகளையும் வலியுறுத்துகிறார். இதன் மூலம், சபாநாயகர் பதவி தனது மதிப்பை இழந்துள்ளது.

எனவே சபாநாயகர் மீது சட்டசபை நடைமுறை, நடத்தை விதிகளின்படி நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வர வேண்டி, சட்டசபை செயலரிடம் மனு அளித்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

# அண்ணாமலை பல்கலை வேதிப்பொறியியல் துறையில் புதிய கணினி வடிவமைப்பு ஆய்வுக்கூடம்: ரூ.50 லட்சம் செலவில் முன்னாள் மாணவர்கள் உதவி



**சிதம்பரம், டிச. 20-**

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேதிப் பொறியியல் துறையில் 1968ஆம் ஆண்டு படித்த கோவையைச் சேர்ந்த தொழிலதிபர் ரவிச்சந்திரன் மற்றும் அவரின் வகுப்பு தோழர்கள் இணைந்து புதியதாக ரூ.50 லட்சம் மதிப்பிலான 34 கம்ப்யூட்டர் மற்றும் குளிர்சாதன வசதிகள் உள்ளடக்கிய ஆய்வுக் கூடம் முன்னாள் பேராசிரியர் பைரவால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்விழாவிற்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கன்வினர் குழு உறுப்பினர் பேராசிரியர் அருட்செல்வி முன்னிலை வகித்தார். புல முதல்வர் பேராசிரியர் கார்த்திகேயன் தலைமை தாங்கி சிறப்புரையாற் றினார். துறைத் தலைவர் பேராசிரியர் சரவணன் அனைவரையும் வரவேற்று முன்னாள் மாணவர்களை ஒருங்கிணைத்து நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்த ஆய்வுக்கூடம் பல்வேறு தொழில்நுட்ப மென்பொருள் மூலம் இரசாயன தொழிசாலைகளில் பயன்படுத்தப்படும் கருவிகள், உபகரணங்கள் மற்றும் பல்வேறு சாதனங்களை எளிமையாக வடிவமைத்து மாணவர்கள் பயன்பெறலாம். முன்னாள் மாணவர்ரவிச்சந்திரன் பேசுகையில் இப் பல்கலைக்கழகத்தி னால் தான் தாங்கள் பலரும் வாழ்வில் ஏற்றம் பெற்று உயர்ந்த நிலையில் இன்று இருப்பதாக கூறி இந்த கட்டமைப்பு வருவதற்கு தங்களின் பங்களிப்பு ஒரு பெரிய நன்றி கடன் என தெரிவித்தார். மேலும் முன்னாள் மாணவர்கள் சதாசிவம், சுவாமிநாதன், சந்தானம், ராஜசேகர் மற்றும் பலர் குடும்பத்தினருடன் பங்கு பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் புல முதல்வர் முருகப்பன் ஆட்சி மன்ற குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், முன்னாள் துறைத்தலைவர்கள் விஜய கோபால், தனசேகர் மற்றும் பல பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் பங்கு பெற்றனர். வேதிப்பொறியியல் துறையில் முன்னாள் மாணவர்கள் தங்களால் இயன்ற பங்களிப்பை தொடர்ச்சியாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



**கோவை, டிச. 20-**

கோவை காந்திபுரம் பகுதியில் உள்ள பெந்தேகோஸ்தே சபைகளின் மாமன்றம் சார்பில் கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மற்றும் அமைச்சர்கள் செந்தில் பாலாஜி, கோ.வி.செழியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். எஸ்.பி.சி.தலைவர் பேராயர் எடிசன் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் செய்தி வழங்கினார். எஸ்.பி.சி.யின் பல்வேறு கோரிக்கைகளோடு பிரதம பேராயர் டேவிட் பிரகாசம் பேசுகையில் கடந்த மூன்று ஆண்டுகளாக, அனைத்து சமூகத்தின் மக்கள் மத்தியில் மத நல்லிணக்கத்தோடு ஆட்சி செய்து வரும், தமிழக முதல்வருக்கு பெந்தெகொஸ்தே சபைகளின் மாமன்றம் சார்பாக மனதார நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கிறிஸ்தவ சமத்துவ கல்லறைத்தோட்டம் அமைக்க நிலம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதின் அடிப்படையில்,. விரைவில் அரசு செய்து தரும் என்ற நம்பிக்கையுடன் காத்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ வழிபாட்டு தலங்களுக்கும் மின்சார இணைப்பை வழிபாட்டு தலத்திற்குரிய விதிகளின் கீழ் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் விடுத்தார்.

தொடர்ந்து விழா மேடையில் பேசிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், உலகமே கொண்டாடும் விழா நமது கிறிஸ்மஸ் விழா எனக் கூறி அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டார். மேலும் திராவிட இயக்கம் இருக்கும் வரை, சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக இருப்போம் எனக் கூறிய அவர், கிறிஸ்தவ மக்கள் வைத்த கோரிக்கைகள், முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இதனை தொடர்ந்து கிறிஸ்துமஸ் கேக் வெட்டி நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார். நிகழ்ச்சியில் எஸ்.பி.சி.பொருளாளர் ஜான்சன் கிருபாகர் பாண்டியன் உட்பட பல்வேறு பெந்தேகோஸ்தே சபைகளின் போதகர்கள், சபை மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து பயிற்சி முகாம்




**காரைக்கால், டிச. 20-**

வருகிற டிசம்பர் 24ஆம் தேதி நடைபெற உள்ள தேசிய நுகர்வோர் தின விழாவை முன்னிட்டு, கல்லூரி மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் குறித்து பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது.வருகிற டிசம்பர் மாதம் 24 ஆம் தேதி தேசிய நுகர்வு தின விழா சிறப்பாக நடைபெற இருக்கிறது. அதனை முன்னிட்டு, காரைக்கால் குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை துணை இயக்குனர் சச்சிதானந்தம் மற்றும் காரைக்கால் மதர் தெரசா நர்சிங் கல்லூரியின் முதல்வர் ஜெயபாரதி தலைமையில், காரைக் கால் மாவட்டத்தில் அனைத்து கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019 மற்றும் உணவு கலப்படம் சம்பந்தமாக பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், புதுச்சேரி உணவு பாதுகாப்பு அதிகாரி ரவிச்சந்திரன் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பாதுகாப்பான உணவு மற்றும் உணவில் உள்ள கலப்படம் குறித்தும் பயிற்சி கொடுத்தார். நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் பற்றிய விரிவான தகவல்கள் நுகர்வோர் கூட்டமைப்பின் மாநில தலைவர் வழக்கறிஞர் எஸ். திருமுருகன் வழங்கினார். மாநிலச் செயலாளர் சிவக்குமார், மாவட்ட செயலாளர் ராஜதுரை மற்றும் கல்லூரியின் ஆசிரியர்கள், குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை, குடிமைப் பொருள் அதிகாரி மகேஷ் சிறப்பாக ஏற்பாடு செய்து நன்றி கூறினார்.

# சேலம் சௌடேஸ்வரி கல்லூரியில் மாவட்ட அளவிலான யூத் ரெட் கிராஸ் பயிற்சி முகாம்





சேலம், டிச. 20-

இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி தமிழ்நாடு கிளை மற்றும் யூத் ரெட் கிராஸ் சேலம் மாவட்டம் ஆகியோர் இணைந்து சேலம் சௌடேஸ்வரி மகளிர் கல்லூரியில் மாவட்ட அளவிலான யூத் ரெட் கிராஸ் மாணவர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமை கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலர் குமாராஜா துவக்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் பொறுப்பு முனைவர். பூங்கொடி வரவேற்புரை ஆற்றினார். பெரியார் பல்கலைக்கழகத்தின் யூத் ரெட் கிராஸ் மண்டல ஒருங்கிணைப் பாளர் முனைவர் பத்மசேகரன் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இப்பயிற்சி முகாமில் வைஸ்யா கல்லூரியின் யூத் ரெட் கிராஸ் அலுவலர் கணேசன் ''சமுதாயத்தில் இளைஞர்களின் பொறுப்பு' என்ற தலைப்பில் யூத் ரெட் கிராஸ் மாணவர்கள் இன்றைய சமுதாயத்தின் தேவையை உணர்ந்து சேவை செய்ய முன்வர வேண்டும் என்று உரையாற்றினார். சேலம் அரசு மருத்துவமனையின் இரத்த வங்கி அலுவலர் டாக்டர். ரவீந்திரன் இரத்த தானம் செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து பிற்பகல் நிகழ்வில் பேரிடர் மேலாண்மை, முதலுதவி மருத்துவம் மற்றும் போதை தடுப்பு போன்ற பல்வேறு விழிப் புணர்வு பயிற்சிகள் நடைபெற்றது. இதில் மாருதி இரத்த வங்கி அலுவலர் வெங்கடாசலம், சௌடேஸ்வரி கல்லூரியின் வேதியியல் துறைத் தலைவர். கேப்டன் ராஜா மற்றும் ஜெஆர்சி கன்வீனர் மற்றும் முதலுதவி பயிற்சி சான்றிதழ் பெற்ற பிரபாகரன் ஆகியோர் பங்கேற்று பயிற்சி அளித்தனர். இந்த பயிற்சி முகாமில் 25 கல்லூரியில் இருந்து 130 மாணவ மாணவிகள் மற்றும் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் சௌடேஸ்வரி கல்லூரியின் இயற்பியல் துறை உதவி பேராசிரியர் தினேஷ் வாழ்த் துரை வழங்கினார் நிறைவாக சேலம் மாவட்ட யூத் ரெட் கிராஸ் ஒருங்கிணைப்பாளர் இணை பேராசிரியர் வேதியியல் துறை முனைவர் வடிவேல் இந்த ஒரு நாள் பயிற்சி முகாமை ஏற்படும் செய்து கலந்து கொண்ட அனை வருக்கும் நன்றி கூறினார்.

# கும்பகோணம் இதயா மகளிர் கல்லூரியில் உடல் உறுப்பு தானங்கள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



கும்பகோணம், டிச. 20-

கும்பகோணம் இதயா மகளிர் கல்லூரியில் இளைஞர் செஞ்சிலுவை ( சீஸிசி) சங்கத்தின் சார்பாக உடல் உறுப்பு தானங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது, முதல்வர் அருட் சகோதரி முனைவர் யூஜின் அமலா தலைமை வகித்தார். நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக தானம் மற்றும் ஜெபஸா அமைப்பின் நிறுவனர், மனிதநேய அமைப்பாளர், தயான் ஆஸ்ரமம் சென்னை, அருட் தந்தை ஜெர்ரி ரொசாரியோ கலந்து கொண்டு உடல் உறுப்பு தானம் பற்றிய கருத்துக்களையும், உறுப்புகளை தானங்கள் கொடுப்பதினால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் எடுத்துரைத்தார். நிகழ்வில் 2432 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்வினை இளைஞர் செஞ்சுலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் தொகுத்து வழங்கினார்.

# சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் சட்டம் சொல்வது என்ன ?

புதுச்சேரி, டிச. 20-

புதுச்சேரி சபாநாயகர் மீது சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லா தீர்மானம் உடனடியாக விவாதத்திற்கு வர வாய்ப்பு இல்லை என, அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித் துள்ளனர்.

புதுவை சபாநாயகர் செல்வம் மீது, சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு நேற்று நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வர வேண்டி சட்டசபை செயலர் தயாளனிடம் மனு கொடுத் துள்ளார். இந்த நிலையில் இது குறித்து சட்டம் சொல்வது என்ன? பாராளுமன்றத்திலோ, சட்டமன்றத் திலோ, சபாநாயகர் மீது நம்பிக்கையில் லாத தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்றால், குறைந்தபட்சம் சபை தொடங்கும் 16 நாட்களுக்கு முன் மனு அளிக்க வேண்டும். சபை தொடங்கும் நாளில், அந்த தீர்மானம் எடுக்கப்படும் போது துணை சபாநாயகர் தான் இந்த தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்து தீர்மானம் கொண்டு வந்த எம்.எல்.ஏ.,வை பேச அழைப்பார்.

அதைத் தொடர்ந்து, அந்த தீர்மானத்தை சபையில் உள்ள உறுப்பினர்களின் 5ல் ஒரு பங்கினர் ஆதரித்தால் மட்டும் தான் விவாதத்திற்கு ஏற்கப்படும். (அதாவது 7 எம்.எல்.ஏ.,க்கள் ஆதரித்தால் மட்டுமே விவாதம் நடத்தப்படும்.) விவாத முடிவில் ஓட்டெடுப்பு நடத்தி, அதில், அதிக உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆதரித்தால் மட்டுமே, சபாநாயகர் பதவி இழப்பார். 7 எம்.எல்.ஏ.,க்கள் ஆதரவு இல்லை என்றால் விவாதத்திற்கு முன்பே தள்ளுபடி செய்யப்படும். தற்போது, சட்ட சபையில் என்.ஆர்.காங்கிரஸ் 10, பாஜக 6, திமுக 6, சுயேட்சை 6, காங்கிரஸ் 2, மற்றும் நியமன எம்.எல்.ஏ.,க்கள் 3 என மொத்தம் 33 எம்.எல்.ஏ., க்கள் உள்ளனர்.

இந்த சூழ்நிலையில், நேரு எம்.எல்.ஏ., கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை திமுக மற்றும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.,க்கள் ஆதரித்தால் மட்டுமே விவாதத்திற்கு ஏற்க வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதம் சட்டசபையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதனால், வரும் பிப்ரவரி மாதம் வரை சட்டசபை கூட வாய்ப்பில்லை என்பதால் இந்த தீர்மானம் உடனடியாக சட்டசபையில் விவாதிக்க வாய்ப்பு இல்லை என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம்



உளுந்தூர்பேட்டை, நவ. 20-

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந் தூர்பேட்டை இந்திய அரசியலைமப் புச் சட்டத்தை வடிவமைத்த சட்ட மேதை புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப் பாட்டம் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண் ணன் தலைமையில் நடைபெற்றது.

நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் வைத்தியநாதன், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் டேனியல் ராஜ், ஒன்றிய செயலாளர் கள் கேவி முருகன் வசந்தவேல், மாவட்ட கவுன்சிலர் ப்ரியா பாண்டி யன், இளைஞரணி அமைப்பாளர் அருள்ராஜ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் குருராஜ், நிர்வாகிகள் நீதிபதி, தட்சணாமூர்த்தி, மணிகண்டன், சரவணன், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர்.

# ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து சேலம் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஆர்ப்பாட்டம்



சேலம், டிச. 20-

சேலம் கிழக்கு மாவட்ட திமுக மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் தலைமையில், மாவட்ட கழக துணை செயலாளர் பாரப்பட்டி சுரேஷ்குமார் முன்னிலையில் பனமரத்துப்பட்டி ஒன்றியம் அமானி கொண்டலாம்பட்டி ஊராட்சியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை முன்பு புரட்சியாளர், சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்திய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் உமாசங்கர், ஒன்றிய குழு துணை தலைவர் காட்டூர் சங்கர், பேரூர் கழக செயலாளர் ரவிக்குமார், சரவணன்,கூத்தன், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# வைகை ஆற்றில் இருந்து தெப்பக்குளத்திற்கு உபரிநீர் செல்லும் பகுதியில் கண்காணிப்பு அலுவலர் ஆய்வு



மதுரை, டிச. 20-

மதுரை மாநகராட்சி வைகை ஆற்றில் இருந்து தெப்பக்குளத்திற்கு உபரிநீர் செல்லும் பகுதிகளில் மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கணேஷ், ஆய்வு செய்தார்.

மதுரை மாநகராட்சி வைகை ஆற்றில் இருந்து பனையூர் வாய்க்கால் வழியாக தெப்பக்குளத்திறகு உபரிநீர் செல்லும் பகுதிகளில் மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கணேஷ், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மதுரை மாநகராட்சி பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக மாநகர் பல்வேறு பகுதியில் மழைநீர் தேங்கியிருந்தது. சுரங்கப்பாதைகள், சாலைகளில் தேங்கியிருந்த மழைநீர் மாநகராட்சி பணியாளர்களால் உடனுக்குடன் அகற்றப்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி வைகை ஆற்றில் செல்லும் உபரிநீர் பனையூர் வாய்க்கால் வழியாக தெப்பக்குளத் திற்கு சென்று அடைகிறது. தெப்பக் குளத்திற்கு வைகை ஆற்று நீர் சென்று அடையும் வழிகளான வைகை தென்கரை ஜீரோ பாயிண்ட், புது ராம்நாட் ரோடு பகுதி வழியாக மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு சென்று அடையும் பகுதிகளில் மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் நேரில் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் வைகை வடகரை ஆழ்வார் புரம் (தேனி ஆனந்தம் அருகில்) பந்தல்குடி வாய்க்காலில் இருந்து வைகை ஆற்றில் கலக்கும் நீர் வழித் தடத்தையும் மற்றும் கனமழையின் காரணமாக வைகை ஆற்றின் நீர் வரத்து குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், தலைமை பொறியாளர் ரூபன்சுரேஷ், கண்காணிப்பு அலுவலர் முகம்மது சபியுல்லா, செயற் பொறியாளர்கள் சுந்தரராஜன், சேகர், உதவி செயற்பொறியாளர் மயிலேறிநாதன், உதவிப்பொறியாளர் சந்தனம், சுகாதார அலுவலர் கோபால், உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# கோவை திருமண்டல பேராயர் திமோத்தி ரவீந்தர் கிறிஸ்துமஸ் வாழ்த்து



கோவை, டிச. 20-

கோவை ரேஸ்கோர்ஸ் பகுதி சிஎஸ்ஐ பிஷப் கிறிஸ்துவ ஆலயம் சார்பில் உலக மக்கள் அனைவருக்குமான கிறிஸ்துமஸ் பண்டிகையை அன்பு, ஒற்றுமை, சமதர்மம், மனிதநேயம் ஆகியவற்றை பாதுகாத்து ஒற்றுமையாக. கொண்டாடுவோம் என தென்னிந்திய திருச்சபைகளின் கோவை திருமண்டல பேராயர் மறைதிரு திமோத்தி ரவீந்தர் தனது கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் செய்தியாக மூன்று நாம் அனைவரும் தாழ்மையாக இருக்க வேண்டும் என்ற செய்தி கிறிஸ்து பிறப்பில் இருப்பதாக குறிப்பிட்ட அவர், அனைவரிடத்திலும் அன்பு காட்ட வேண்டும் என்றார். இரண்டாவதாக நாம் பெறும் மகிழ்ச்சி மற்றவர்கள் அனைவரும் பெறும் வகையில் தன்னலமற்ற வாழ்க்கை முறையை அனைவரும் பின்பற்றினால் மகிழ்ச்சி கிடைக்கும் என்றார். மூன்றாவதாக உலக மக்கள் அனைவருக்குமான கிறிஸ்துமஸ் பண்டிகையை அன்பு, ஒற்றுமை, சமதர்மம், மனிதநேயம் ஆகியவற்றை பாதுகாத்து ஒற்றுமையாக. கொண்டாடுவோம் என அவர் தெரிவித்தார். இந்த சந்திப்பின்போது தென்னிந்திய திருச்சபைகளின் கோவை திருமண்டல உப தலைவர் ஆயர் டேவிட் பர்னபாஸ், செயலாளர் ஆயர் பிரின்ஸ் கால்வின், பொருளாளர் அமிர்தம் மற்றும் வழக்கறிஞர்கள் ஸ்டான்லி ராஜா சிங், விஜய் ஆனந்த், பிரவீன் விமல் ஆகியோர் உடனிருந்தனர்.

# செஞ்சியில் அஞ்சல் அலுவலகத்தை விசிகவினர் முற்றுகையிட்டு போராட்டம்



செஞ்சி, டிச. 20-

நாடாளுமன்றத்தில் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கரை அவமதிப்பு செய்யும் வகையில் பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை பதவி விலக கோரி செஞ்சி நான்கு முனை சந்திப்பு அருகே உள்ள அஞ்சல் அலுவலகம் எதிரில் விசிக சார்பில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் மிசா.தனஞ்செழியன் தலைமையில் முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

அப்போது விசிகவினர் அஞ்சல் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அதனைத் தொடர்ந்து செஞ்சி நான்கு முனை சந்திப்பில் சாலை மறியலில் ஈடுபட்டனர். அப்பொழுது அமித்ஷாவின் உருவப்படத்தை எரித்து அமித்ஷாவை பதவி விலக கோரி கண்டன கோஷங்கள் எழுப்பினார்கள். இந்த நிகழ்வில் விசிக ஆரணி நாடாளுமன்ற தொகுதி செயலாளர் வழக்கறிஞர் நன்மாறன், செஞ்சி நகர செயலாளர் செஞ்சி சிவா, மாநில துணை செயலாளர் துரைவளவன், வழக்கறிஞர் மணிபாங்கு, மா.க.வெங்கடேசன், ஒன்றிய செயலாளர்கள் திருநாவுக்கரசு, கிருஷ்ணன், நகரப் பொருளாளர் வழக்கறிஞர் காமராஜ், ஒன்றிய பொருளாளர்கள் ஜான்,பார்வேந்தன், ஈச்சர் காளிதாஸ், துத்திப்பட்டு கோவிந்தன், வெங்கடேசன், நகரத் துணைச் செயலாளர்கள் ஹரிகுமார், தலித் மகிவரசு, செந்தில் உள்ளிட்ட விசிகவினர் 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் ஆட்சியர் களஆய்வு



தென்காசி, டிச. 20-

"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே..கமல்கிஷோர் தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேவிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய் சேய் வார்டுகளை ஆய்வு செய்தும், மருந்துகளின் இருப்புகள் குறித்தும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்தும் கேட்டறிந்தார். அங்கன்வாடி மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், வீடு மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் 10 வீடுகளை சீரமைக்கும் பணிணினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். வாசுதேவநல்லூர் வனச்சரகத்திற்குட்பட்ட பகுதியில் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பேச்சியம்மன் கால்வாயினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், தேவிப்பட்டினம் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் கோப்புகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், இனாம் கோவில்பட்டியில் தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய சேமிப்புக்கிடங்கினையும், அங்கன்வாடி மையத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், நியாய விலைக்கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி, பாமாயில், சீனி, பருப்பு உள்ளிட்ட பொருட்களின் இருப்புகளையும், தரத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இனாம் கோவில்பட்டியில் வீடு மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் வீடுகளை சீரமைக்கும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், ஊராட்சி மன்ற அலுவலகத்தினை நேரில் பார்வையிட்டு கோப்புகளை பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சிவகிரி பேரூராட்சியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் சத்துணவுத் திட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை பார்வையிட்டும், விசுவநாதபேரி கம்மவார் இந்து உயர்நிலைப்பள்ளியில் சத்துணவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் உணவின் தரத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் செயல்படும் அரசு மாணவியர் விடுதியினை பார்வையிட்டு அடிப்படை வசதிகள் மற்றும் உணவின் தரம் குறித்தும் கேட்டறிந்தார். திருமலாபுரம் ஊராட்சியில் வேளாண்துறையின் மூலம் விதைப்பண்ணை அமைக்கும் திட்டத்தின் கீழ் 2 ஏக்கர் பரப்பளவில் விதைப்பண்ணை அமைக்கும் பணியினையும், தேசிய தோட்டக்கலைத்துறை மூலம் தேசிய இயக்கத்திட்டத்தின் கீழ் 2.5 ஏக்கர் பரப்பளவில் நில முடக்கு மற்றும் சொட்டுநீர் பாசனம் அமைக்கும் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, வேளாண் கூட்டுறவு வங்கியில் 57 பயனாளிகளுக்கு ரூ.67.87 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும், இரண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களை தொடங்கி வைத்ததற்கான சான்றிதழ்களையும் வழங்கினார்.

தொடர்ந்து, சிவகிரி வட்டத்திற்குட்பட்ட பல்வேறு அலுவலகங்கள் ஆய்வு மேற்கொள்ளப்படுவதோடு, சிவகிரி வட்டம் பேருந்து நிலையம் அருகில் உள்ள தேவர் திருமண மண்டபத்தில் பொதுமக்களை சந்தித்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு முறையான கோரிக்கை மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, சிவகிரி வட்டாட்சியர் ரவிக்குமார், வாசுதேவநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கருப்பசாமி, மல்லிகா, தென்காசி மண்டல இணைப்பதிவாளர் நரசிம்மன், துணைப்பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) கோபிநாத், கூட்டுறவுத்துறை செயலாட்சியர் மாரியப்பன், வேளாண்மைத்துறை அலுவலர்கள், தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## புதிய பள்ளி கட்டிடத்தை மாணவர்களை திறக்க வைத்த அமைச்சர்





புதுக்கோட்டை, டிச. 20-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள நகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பறை கொண்ட புதிய கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ மெய்யநாதன் கலந்துகொண்டார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடத்தினை பள்ளியில் பயிலும் மாணவர்களை திறக்க வைத்தார். பின்னர் மாணவர்களை வாழ்த்தி பேசிய அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாணவர்களை விளையாட்டு துறையில் ஈடுபடுத்த வேண்டும். பள்ளிகளுக்கு கிடைக்கக்கூடிய அரசு திட்டங்களை விளக்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு கோடியே 70 லட்சம் குடும்பங்களுக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் கிடைக்கக்கூடிய புதிய திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார் என்று பேசினார்.

பள்ளி தலைமை ஆசிரியர் வரவேற்றார். நிகழ்ச்சியில் நகரம் ஜெமீனை சார்ந்த மூத்தவர் தங்கராஜா, கீரமங்கலம் பேரூராட்சி மன்ற தலைவர் சிவகுமார், கிழக்கு ஒன்றிய செயலாளர் ரவி, பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் வழக்கறிஞர் விஜய ராஜகுமாரன், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், முன்னாள் தி.மு.க. ஒன்றிய செயலாளர் இராம தமிழரசன், ஊராட்சி மன்றத்தின் தலைவர் பானுமதி குணசேகரன், துணைத் தலைவர் ராமையா ராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# அரசின் சாதனைகள் புகைப்படக்கண்காட்சி



கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி பேரூராட்சிக்குட்பட்ட திட்டுவிளை பேருந்துநிலையத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# முள்ளக்காடு கடற்கரையில் அமைச்சர்கள் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் முள்ளக்காடு கடற்கரையில் கடல்நீர் சாகச விளையாட்டுகள் நடத்துவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் குறித்து அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# எருது விடும் விழா நடத்த ஆட்சியர் ஆலோசனை




வேலூர் மாவட்டத்தில் எருது விடும் விழா நடத்த அனுமதிகோரும் விண்ணப்பங்கள் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ள இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து சார்நிலை அலுவலர்கள் மற்றும் எருது விடும் விழா நடத்தும் விழா குழுவினருடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.

# அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் அ.தொட்டியப்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007




# தமிழக சட்டசபை ஜனவரி 6ம் தேதி கூடுகிறது

# அரியானா முன்னாள் முதல்வர் காலமானார்






# எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்றத்தில் போராட்டம்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 20-12-2024 வெள்ளிக்கிழமை •வெளியூர்: 21-12-2024 சனிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்